**கரூர் நகராட்சியில் 2018ம் வருடம் ஏப்ரல் மாதம் 30ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**

**1)**இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் Segregation shed மற்றும் Retinement shed அமைக்கும் பணி அமைக்க முன் நிரவப்பட்டுள்ள குப்பைகள் முழுவதுமாக அகற்றிவிட்டு Gravel filling செய்யவும், மேற்படி பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை கடினமான தரை வரைக்கும் எடுத்து அப்புறப்படுத்தி மீண்டும் மண் கொண்டு நிரப்பவும் ஆகும் செலவு மதிப்பீடு ரூ.3,50,000/– மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு**
1) அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம்.
(இ1/2018)

தீர்மான எண்.809 அனுமதிக்கப்பட்டது.

2) கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 ரத்தினம் சாலை பகுதியில் பழுதடைந்த பாதாள சாக்கடை குழாய்களை மாற்றி அமைக்கும் பணிக்கு முதல் முறையாக 09.01.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.10லட்சம்**

1. திரு.V.சுப்பையா, வடபழனி, சென்னை மதிப்பீட்டை விட 0.12% சதம் குறைவு
2. திரு.G.ரெங்கசாமி,வேளச்சேரி, சென்னை மதிப்பீட்டை விட 3.89% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு.V.சுப்பையா, வடபழனி, சென்னை** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3. மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகராட்சி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் குறைந்த தொகையுடைய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை செய்து முடிக்கவும் அதற்கான பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி முன் அனுமதியின் அடிப்படையில் மேற்கொண்டதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/11212/2017)

தீர்மான எண்.810 பின்னேற்பு வழங்கப்பட்டது.

**3)**கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் வாங்கப்பாளையம் நீரேற்று நிலையத்தில் இருந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்று நிலையத்தில் சோடியம் ஹைட்ரோ குளோரின் சப்ளை செய்யும் பணிக்கு **ரூ.0.45 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Sathiya Agencies, Karur | 13.00% குறைவு |
| 2) | ASN Chemicals, T.Sellandipalayam, karur | 12.50% அதிகம் |
| 3) | Tanushree Agencies, Erode | 12.75% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ASN Chemicals, T.Sellandipalayam, karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.0.45 லட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**(இ3/711/2017)**

தீர்மான எண்.811 பதிவு செய்யப்பட்டது.

**4)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 ராணி மங்கம்மாள் தெருவில் ஆய்வு குழி மற்றும் பாதாள சாக்கடை குழாய்கள் அமைக்கும் பணிக்கு முதல் முறையாக 09.01.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.22.60லட்சம்</u>**

1. திரு.V.சுப்பையா, வடபழனி, சென்னை மதிப்பீட்டை விட 0.10% சதம் குறைவு
2. திரு.G.ரெங்கசாமி,வேளச்சேரி, சென்னை மதிப்பீட்டை விட 3.95 % சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு.V.சுப்பையா, வடபழனி, சென்னை** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகராட்சி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் குறைந்த தொகையுடைய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை செய்து முடிக்கவும் அதற்கான பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(இ5/10506/17)**

தீர்மான எண்.812 அங்கீகரிக்கப்பட்டது.

**5)** கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39 தில்லை நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள வடிகால் மூலம் கழிவுநீர் வெளியேற வழியில்லாமல் அப்பகுதிலேயே தேங்கி நிற்பதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே, அப்பகுதி பொதுமக்களின் பொதுசுகாதாரம் நலன் கருதி கழிவுநீர் தேங்காமல் இருக்க புதிதாக வடிகால் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 13.12.2017ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 09.01.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 லட்சம்</u>

1. திரு.ஜி.செந்தில்குமார் ஒப்பந்ததாரர் கரூர் மதிப்பீட்டை விட 0.10% சதம் குறைவு

2. திரு.ஸ்ரீசேரன் கன்ஸ்ட்ரக்ஷன், கரூர் மதிப்பீட்டை விட 3.91% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்தை பொது நிதியில் செலவு செய்து கொள்ள ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஜி.செந்தில்குமார் ஒப்பந்ததாரர் கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/6762/2017)

தீர்மான எண்.813 ஏற்கப்பட்டது.

6)கரூர் நகராட்சிக்குட்பட்ட அரசு காலனியில் இயங்கி வரும் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கரூர் மற்றும் இனாம்கரூர் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கரூர் மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் இருந்து வரப்பெற்ற கடித எண். F.KAR0462/RS/DEE/TNPCB/KAR/2017 Dated.22.03.2018 தேதி கடிதத்தின்படி 2015–2016, 2016–2017, 2017–2018 நிலுவையும், 2018–2019 நடப்பு ஆண்டிற்கான மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சான்று பெறுவதற்கான தொகை ரூ.1,20,000/– (ரூபாய் ஒரு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) District Environmnetal Engineer Tamil Nadu Pollution control Board க்கு வழங்க மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கரூர் அவர்களின் கடிதத்தின்படி குடிநீர் மற்றும் வழங்கல் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சான்று பெறுவதற்கான தொகை ரூ.1,20,000/–யை District Environmnetal Engineer Tamil Nadu Pollution control Board க்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ5/4671/2012)

தீர்மான எண்.814 அனுமதிக்கப்பட்டது.

7)தமிழ்நாடு அரசிதழ் எண்.33 நாள்.25.01.2018ல் தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் இரண்டாம் திருத்தம் சட்டம் 2018ல் சட்ட திருத்தத்தின்படி நகராட்சி பகுதிகளில் உள்ள தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 82ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில் நகராட்சியால் சொத்துவரியானது விதிக்கப்படுகிறது. மேலும் வரிவிதிப்பு விதி 6–அன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சொத்துவரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் 218, (2018தமிழ்நாடு சட்டம் 6) ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1) (சி)க்கு கீழ்கண்டவாறு சட்ட திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT-1920 5. IN SECTION 83 OF THE TAMIL NADU DISTRICT MUNICIPALITIES ACT 1920 IN SUB-SECTION.

1)for clasue (c). the following clause shall be substituted. Namely:-

"(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or

animals and orphanages, homes and schools for the def and dumb. Asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of peroperty tax;":

(2) in the proviso for the Expression "clauses (a), (c) and(e) the expression "clauses(a) and(e) " shall be substituted.

மேற்படி சட்ட திருத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிகான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி) –ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்,1920, பிரிவு 83(1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்துவரியாக விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்,1920, பிரிவு 83(1) (சி)–ற்கு வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்,1920, பிரிவு 78(3)–ன்படி, ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழ் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்,1920, பிரிவு 78(3)–ன்படி,வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்காணும் வழிமுறைகளை பின்பற்றி இந்நகராட்சி பகுதிகளில் உள்ள தனியார் கல்வி நிறுவனகட்டிடங்கள் மற்றும் அரசு உதவிப்பெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்,1920, பிரிவு 78(3)–ன்படி, தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் அதற்க்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (அ1/2018)

தீர்மான எண்.815 அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42 ஜல்லி வடநாயக்கனூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் சமுதாய கட்டிடத்திற்கு மேல்புறம் மின்வாரியத்தின் மின்கம்பிகள் மிகவும் தாழ்வாக செல்வதால் மேற்கூரைப் பணிகள் செய்ய இயலாத சூழல் உள்ளது. எனவே மின் கம்பிகளை இடையூறு ஏற்படாவண்ணம் மாற்றி அமைக்க மின்சார வாரியத்திற்கு இவ்வலுவலக ந.க.எண்.1020/2012 நாள்.07.02.2018 அனுமதி கோரியதில் தமிழ்நாடு மின்சார வாரிய இளமின் பொறியாளர் கரூர் அவர்களின் கடித எண்.உதவிபொறியாளர்/இயக்கலும்காத்தலும்/கிராமியம்/கரூர்/கோ–கட்டு/ அ.எண்.09/1819 நாள்.06.04.2018–ன்படி மின்கம்பிகளை மாற்றி அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.88090/–ஐ செலுத்த கோரியதின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மேற்படி மின்கம்பிகளை இடையூறு ஏற்படாவண்ணம் மாற்றி அமைக்கவும், மின்வாரிய கேட்பின்படி தொகையினை மின்வாரியத்திற்க்கு செலுத்த அவசர அவசியத்தினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை ரூ.88090/—ஐ மின்சார வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். (இ3/2018)

தீர்மான எண்.816 அங்கீகரிக்கப்பட்டது.

9) கரூர் நகராட்சிக்கு சொந்தமான பாலம்மாள்புரத்தில் அமைந்துள்ள நீறைக்கும் நிலையத்தில் உள்ள தரை மட்ட தொட்டியிலிருந்து பசுபதிபாளையம், ராமானூர் ஆகிய பகுதிகளுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. அத்தொட்டியில் தற்பொழுது 25HP மோட்டார் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. அம்மோட்டாரில் இருது 10” மற்றும் 8” குழாய்கள் அமைத்து நீர் செலுத்தவும் மோட்டாருக்குத் தேவையான உதிரி பாகங்கள் வாங்கி பொருத்தவும், அங்குள்ள ஜெனரேட்டரின் Self starterக்கு 2 எண்ணிக்கை 150AH புதிய பேட்டரி வாங்கி பொருத்தவும் பழைய 2HP மோட்டாரை பழுது பார்த்து மறுபடியும் பொருத்தும் பணிக்கு **ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு முடிக்கப்பட்டு செலவினம் ரூ.4.00 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியின் மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers, Karur | 0.20% குறைவு |
| 2) | Santhosh Electrical Rewinding works, Karur | 0.34% அதிகம் |
| 3) | Best Rewinding work, Karur | 0.89% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று பணியினை செய்து முடித்து செலவினத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம் (இ3/12071/2017)

தீர்மான எண்.817 பின்னேற்பு வழங்கப்பட்டது.

10) கரூர் நகராட்சிக்குட்பட்ட நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு மோட்டாரில் ஒன்று பழுதடைந்து உள்ளது. அதனை பழுது பார்த்து மோட்டாரை மாற்றி மாற்றி இடைவிடாமல் இயக்கும் பணிகளுக்கும், பழுதாகி உள்ள Capacitor மற்றும் Earth -யை மாற்றும் பணிக்கு **ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு முடிக்கப்பட்டு செலவினம் ரூ.1,22,390 யை நகராட்சி குடிநீர் நிதியின் மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers, Karur | 0.02% குறைவு |
| 2) | Sun Electrical Service, Karur | 0.87% அதிகம் |
| 3) | Santhosh Electrical & Rewinding works, Karur | 1.06% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று பணியினை செய்து முடித்து செலவினத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம். (இ3/764/2018)

தீர்மான எண்.818 பின்னேற்பு வழங்கப்பட்டது.

11)கரூர் நகராட்சிக்கு சொந்தமான Bio Methonation Plant –யை 50 கே.வி.ஏ ஜெனரேட்டரில் உள்ள மின்கலப்பெட்டி பழுதடைந்துள்ளதை பழுது பார்த்து ஜெனரேட்டருக்கு ஆயில் சர்வீஸ் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டும், தினசரி உணவுக் கழிவுகள் மற்றும் ஆர்கானிக் கழிவுகளை பய்னபடுத்தி மின்சாரம் எடுக்கும் பணியினை தடைப்படாமல் கவனிக்கும் பணிக்கு **ரூ.0.25 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று கீழ்கானும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு முடிக்கப்பட்டு செலவினம் ரூ.0.25 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியின் மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers, Karur | 0.20% குறைவு |
| 2) | Power Engineering works, Karur | 2.50% அதிகம் |
| 3) | GRS Generator Engineering, Karur | 3.50% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2) மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று பணியினை செய்து முடித்து செலவினத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம். (இ3/763/2018)

தீர்மான எண்.819 பின்னேற்பு வழங்கப்பட்டது.

12)இந்நகராட்சி வார்டு எண்.29 திருமாநிலையூர் பகுதியில் கரூர் நகராட்சிக்கு உத்தேச பேருந்து நிலையம் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் தமிழக அரசின் சார்பில் மறைந்த முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியினை எதிர்வரும் 04.10.2017 அன்று நடத்திட உத்தேசிக்கப்பட்டு, மேற்படி விழாவில் சுமார் 50,000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள உத்தேசித்துள்ளதாலும் மேலும் இவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளதாலும், விழா நடைபெறும் புல எண்.95/2, 97/2, 98/1, 113/1 உள்ளிட்ட 25 புல எண்களில் கட்டப்பட்ட 12.14 ஏக்கர் பரப்பளவு கொண்ட உத்தேச புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு ஒப்படைக்கப்பட்ட நிலத்தினை விழா நடத்திட ஏதுவாக 04.10.2017 முதல் 07.10.2017 வரை மாவட்ட நிர்வாகத்திற்கு ஒப்படைப்பு செய்யவும், தற்சமயம் பருவமழை காலம் என்பதால் விழாவில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் எளிதில் சென்று அடையும் வகையிலும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் கார்கள் எளிதில் விழா மேடை வரை சென்று வரும் வகையில் விழா நடைபெறும் இடத்தில் தார் சாலை அமைத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.இ1/12349/2017 நாள்.15.09.2017ல் தெரிவித்துள்ளதின் அடிப்படையில் விழா நடைபெறும் பகுதி காலி நிலமாக உபயோகப்படுத்தாத நிலமாக இருப்பதாலும், நிலத்தின் மேற்பரப்பு இளகிய மண் பரப்பாக இருப்பதால் விழா வளாகத்தின் நுழைவு தோரண வாயில் முதல் விழா மேடை மற்றும் முக்கிய பிரமுகர்களின் கார் நிறுத்துமிடம் வரை இளகிய மண் பரப்பின் மீது கிணற்று நொரம்பு கொட்டி வெட்மிக்ஸ் மெக்காடம் மற்றும் தார் தளம் அமைக்கும் பணிக்கு ரூ.18.40இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செய்து முடிக்க போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைகளின்படி பணியினை விழா நடைபெறும் நாளுக்கு முன்பாக பணியினை முடிக்க வேண்டியும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடிக்க நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரரான திரு.PRG Construction Karur என்பவர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து செலவினம் ரூ.17,94,573/– நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரா் விபரம் | மதிப்பீட்டு தொகை | விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மொத்தத் தொகை | மதிப்பீடு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | PRG Construction<br>13ஏ, கோவை ரோடு, கரூா் | ரூ.18,40,000/– | ரூ.18,13,850/– | மதிப்பீட்டினை விட 0.15 சதவீதம் குறைவு |
| 2) | KPD Constractors<br>ஆறு ரோடு புத்தாம்பூா் கிராமம்<br>கரூா் | | ரூ.18,30,502/– | மதிப்பீட்டினை விட 0.77 சதவீதம் கூடுதல் |
| 3) | திரு.ஆா்.தங்கவேல்<br>78, காளியப்பனுாா்<br>கரூா் | | ரூ.18,39,816/– | மதிப்பீட்டினை விட 1.29 சதவீதம் கூடுதல் |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் பாா்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான மதிப்பீட்டினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பணியினை மேற்கொண்டு செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பும் வழங்கலாம். (இ1/9315/2017)

தீா்மான எண்.820 பின்னேற்பு வழங்கப்பட்டது.

13)கரூா் நகராட்சியுடன் இனாம்கரூா் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டு நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்து 48 வாா்டுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட கரூா் நகராட்சியின் மொத்த பரப்பளவு 53.26 சதுர கி.மீட்டா் ஆகும். தற்பொழுது பராமரிக்கப்பட்டு வரும் மொத்த சாலையின் நீளம் 326.841 கி.மீ., ஆகும்.

கரூா் நகர பொதுமக்களால் சராசரியாக தினந்தோறும் 116 மெட்ரிக் டன் சேகரமாகும் குப்பைகளை இந்நகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் 24.50ஏக்கா் பரப்பளவில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகின்றது. மேலும் நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் 12.03.2018ம் தேதிய கூட்ட நடவடிக்கைகளில் திடக்கழிவு மேலாண்மையினை மேம்படுத்துவதற்கு நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை Bio Mining முறையில் அப்புறப்படுத்த உரிய கருத்துரு தயாா் செய்து சமா்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளாா்கள்.

அதன்படி 20 ஆண்டுகளாக நகராட்சி உரக்கிடங்கில் கொட்டப்பட்டுள்ள குப்பைகள் மலைபோல் குவிந்துள்ளதாலும் சுற்றுச்சூழல் மாசு ஏற்படாவண்ணம் அனைத்து குப்பைகளையும் Bio Mining முறையில் அப்புறப்படுத்தி பயனுள்ள பொருட்களை தயாா் செய்யும் வகையில் நகராட்சி உரக்கிடங்கில் கொட்டியுள்ள குப்பைகளை சா்வே செய்து கணக்கிடப்பட்ட வகையில் 1,41,731 கனமீட்டா் பழைய குப்பைகளை Bio Mining முறையில் அப்புறப்படுத்த நகராட்சி நிா்வாக ஆணையா் சென்னை அவா்களின் ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க தயாா் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.16கோடியினை தூய்மை இந்தியா திட்டம் அல்லது அரசு திட்ட நிதியில் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து தரக்கோரி நகராட்சி நிா்வாக ஆணையா் சென்னை அவா்களின் நிா்வாக அனுமதி வேண்டி உரிய கருத்துருக்களை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/3469/2018)

தீா்மான எண்.821 அனுமதிக்கப்பட்டது.

14)கரூா் நகராட்சி பொறியியல் பிரிவில் ஆணையாளரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு (Mahindra – Scorpio) வாகன எண்.TN 47 AH 6364 க்கு 75,000கிலோமீட்டா் இயக்கிவிட்டதால் இன்ஜின் ஆயில் சா்வீஸ், ஆயில் பில்டா், டீசல் பில்டா் புதிதாக மாற்றி இயக்கும் பணிகள் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மகேந்திரா & மகேந்திரா கம்பெனியின் டீலரும், அரசு

அங்கீகாரம் பெற்ற நிறுவனமான சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட், கரூர் அவர்களின் விலைப்புள்ளியின்படி பணி செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/– யை (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு இவ்வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், வாட்டர் சர்வீஸ், பிரேக் செக்கப், வைபர், பின் கதவு லப்பர் பீடிங், அண்டர் சேஸ் செக்கர் வேலை செய்யும் வகையில் உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

3)மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மகேந்திரா & மகேந்திரா நிறுவன டீலரான சிவா ஆட்டோ மொபைல்ஸ் (பி) லிமிடெட் கரூர் அவர்களிடம் விலைப்புள்ளி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (3011/2018/எச்1)

தீர்மான எண்.822 அங்கீரிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியியர் பிரிவு மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு இயங்கி வரும் இயந்திர வாகன எண் TN 47 AJ 8690 550 மணி கால நேரம் இயங்கிவிட்டதால் மேற்படி இயந்திர வாகனத்தின் பராமரிப்பு பணிகளை கருத்தில் கொண்டு வாகனத்திற்கு ENGINE OIL SERVICE பணிகளை மேற்கொள்வதற்கு மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/s MARWELLS SYNDICATE PRIVATE LIMITED COIMBATORE அவர்களிடம் நேரடியாக விலைப்பட்டியல் பெறப்பட்டதின்படி பணிக்கான செலவுத் தொகை ரூ.6,733/–க்கு மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TN 47 8690 க்கு ENGINE OIL SERVICE பணிகளை செய்வதற்கு மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/s MARWELLS SYNDICATE PRIVATE LIMITED COIMBATORE நிறுவனத்தின் விலைப் பட்டியல் நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும், இதற்குண்டான உத்தேச செலவினத் தொகை ரூ.6,733/–யை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (எச்5/3270/2018)

தீர்மான எண்.823 அனுமதிக்கப்பட்டது.

16)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 முதல் 48 வரையுள்ள கட்டளை மற்றும் மூலக்காட்டானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதியில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு போதிய பணியாளர்கள் மற்றும் உதிரி பாகங்கள் இல்லாத காரணத்தினால் மேற்படி உடைப்புகள் மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு குடிநீர் அவசர அவசியம் கருதி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

3)மேற்படி பணிக்குண்டான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/2017)

தீர்மான எண்.824 அனுமதிக்கப்பட்டது.

17)கரூர் நகராட்சி பொறியியர் பிரிவில் பொதுப்பணி மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வரும் திரு.வே.வெங்கட்ராமன் அவர்கள், படவரைவாளர்களுக்கான இறுதி பணி மூப்பு பட்டியல் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் வெளியிடப்பட்டதில் குறைபாடுகள் உள்ளதென ஆட்சேபனை தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P(MD)No.214/2018ல் நகராட்சி ஆணையர் அவர்களையும் சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கை நகராட்சி சார்பில் ஆஜராகி நடத்தும் பொருட்டு திரு.டி.ரகு வழக்கறிஞர் மதுரை அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.10,000/—ம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (இ4/1843/18)

தீர்மான எண்.825 அனுமதிக்கப்பட்டது.

18)கரூர் நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு மற்றும் அனைத்து வசூல் மையங்களுக்கும் பண மதிப்புள்ள ரசீதுகள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் எழுதுபொருட்கள் மற்றும் தேர்தல் பணியினை எதிர்நோக்கியும் பொருட்கள் வாங்க 2018—2019ம் ஆண்டிற்கு அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களில் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.15,00,000/— (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். (பி7/3005/2018)

தீர்மான எண்.826 அனுமதிக்கப்பட்டது.

19)கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு மூலமாக பராமரிக்கப்பட்டு வரும் (Mahindra – Scorpio) வாகன எண். TN 47 AB 7476 க்கு 1,94,000 கிலோமீட்டர் இயக்கிவிட்டதால் இன்ஜின் ஆயில் சர்வீஸ், ஆயில் பில்டர், டீசல் பில்டர், பிரேக் கட், ஸ்டேரிங் கிட், ஸஸ்பென்சர் அலைமெண்ட் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மகேந்திரா & மகேந்திரா கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பணிமனையின் சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட், கரூர் அவர்களின் விலைப்புள்ளியின் ஏற்று பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.65,000/—ஐ (ரூபாய் அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டமைக்கும் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட 1920ல் பிரிவு 15கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

3)மேற்படி பணிக்கு அரசின் உச்சவரம்புக்கு மேல் உள்ள கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/3279/2018)

தீர்மான எண்.827 அனுமதிக்கப்பட்டது.

20)கரூர் நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டில் உள்ள பொறியர் பிரிவில் மூலமாக பராமரிக்கப்பட்டு வரும் Mahindra Boliro ஈப்பு எண். TN 47 AH 8887, 42,615கி.மீ., தூரம் இயங்கிவிட்டதால் வாகனத்தின் பராமரிப்பு பணிகளை கருத்தில் கொண்டு வாகனத்திற்கு இன்ஜின் ஆயில் சர்வீஸ், வீல் அலைன்மெண்ட் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்யும் பணியினை Mahindra & Mahindra கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரான சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட் கரூர் அவர்களிடம் பெறப்பட்ட விலைப்புள்ளியினை ஏற்று ஆணையரிடம் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்குவதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ.20,000/—ஐ (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்படி பணியினை மேற்கொள்ளவும் உத்தேச செலவினத் தொகை ரூ.20,000/– நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று இவ்வாகனத்தின் டீலரான சிவா ஆட்டோ மொபைல்ஸ் (பி) லிமிடெட் கரூர் அவர்களிடம் விலைப்புள்ளி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (எச்5/3122/2018)

தீர்மான எண்.828 அங்கீகரிக்கப்பட்டது.

21)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதி வார்டு எண்.1 முதல் 14 வரையுள்ள பகுதிகளுக்கு சுகாதாரமான குடிநீர் சப்ளை வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திலிருந்து பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிலையத்தில் உள்ள 200கே.வி.ஏ., ஜெனரேட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு முதன் முறையாக 11.04.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலைக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1.45லட்சம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொாக |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers Karur | 0.14% குறைவு |
| 2) | T.Natarajan, Karur | 2.48% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.675, நாள்.13.02.2018ல் ரூ.1.45லட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

2)மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineers Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/12072/17)

தீர்மான எண்.829 ஏற்கப்பட்டது.

22)கரூர் நகராட்சிக்குட்பட்ட நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 2 எண்ணிக்கை 40எச்.பி., மின்மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு வந்ததில் ஒரு மின்மோட்டார் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு முதன்முறையாக 11.04.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலைக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2.70லட்சம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொாக |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers Karur | 0.18% குறைவு |
| 2) | T.Natarajan, Karur | 2.85% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.534, நாள்.15.08.2017ல் ரூ.2.70லட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

2)மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineers Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/10477/17)

தீர்மான எண்.830 ஏற்கப்பட்டது.

23)கரூர் நகராட்சியில் கரூர், இனாம்கரூர், சணப்பிரட்டி மற்றும் தாந்தோணி பகுதிகளுக்கு காவேரி ஆற்றுப்படுகை நெரூர், வாங்கல் மற்றும் கட்டளை பகுதிகளில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்தின் மூலம் நகரில் உள்ள பல்வேறு கொள்ளளவு கொண்ட 43 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க

தொட்டிக்கு நீரேற்றம் செய்து நகராட்சியால் வழங்கியுள்ள **43330** வீட்டு குடிநீர் இணைப்புகள் மற்றும் **794** பொது குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் **28.12.2017**ம் தேதிய மின்னஞ்சலில் அறிவுறுத்தியுள்ளபடியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கு இணங்கவும், நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பிலும் கரூர் நகராட்சியில் உள்ள குடியிருப்புகளுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்துள்ள கட்டடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் அனைத்து கட்டடங்களுக்கும் வெளிப்பகுதி மற்றும் உள்பகுதி பிளம்பிங் பணிகளை செய்து குடிநீர் இணைப்பு வழங்கவும், மேலும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் நடைபெறுவதில் திட்டப்பணிக்கான மதிப்பீட்டில் குடிநீர் இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டதில் குடிநீர் இணைப்புகளுக்கான குழாய் குடியிருப்பு கட்டடத்தின் மதில்சுவர் வரை பதித்து இணைப்பு வழங்கப்படுவதால் அத்தகைய இணைப்புகளுக்கு வீட்டின் உட்பகுதி பிளம்பிங் பணிகள் செய்து இணைப்புகள் வழங்கும் வகையிலும் கீழ்கண்டவாறு குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு உரிய விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பித்துள்ளார்.

| வ. எண் | குடியிருப்பு பகுதி | சொத்து வரி விதிப்புகளின் மொத்த எண்ணிக்கை | இதுவரை வழங்கப்பட்டு உள்ள குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை | Kfw திட்ட மதிப்பீட்டில் வழி வகை செய்துள்ள குடிநீர் வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை | | வெளிப்பகுதி மற்றும் உட்பகுதி பிளம்பிங் செய்து இணைப்பு வழங்க வேண்டியது | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஏற்கனவே உள்ள இணைப்புகளை மாற்றி அமைத்தல் | புதிதாக வழங்குதல் | இணைப்புகளின் எண்ணிக்கை | இணைப்பு ஒன்றுக்கு | மதிப்பீடு தொகை |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 (3− 4+ 6) | 8 | 9 |
| 1 | கரூர் | 17669 | 12350 | 12350 | 3786 | 1533 | ரூ.5900/− | 90,44,700/− |
| 2 | இனாம் கரூர் | 23094 | 13213 | − | 2000 | 7881 | | 4,64,97,900/− |
| 3 | தாந்தோணி / சணப்பிரட்டி | 28456 | 17767 | − | − | 10689 | | 6,30,65,100/− |
| | மொத்தம் | 69219 | 43330 | 12350 | 5786 | 20103 | | 11,86,07,700/− |

| உட்பகுதி மட்டும் பிளம்பிங் செய்து இணைப்பு வழங்க வேண்டிய | | | மொத்த மதிப்பீடு தொகை |
|---|---|---|---|
| இணைப்புகளின் எண்ணிக்கை | இணைப்பு ஒன்றுக்கு | மதிப்பீடு தொகை | |
| 10 (கலம்−6) | 11 | 12 | 13 (கலம்9 + கலம்12) |
| 3786 | ரூ.3922/− | 1,48,48,692/− | 14,13,00,392/− |
| 2000 | | 78,44,000/− | |
| − | | − | |
| 5786 | | 2,26,92,692/− | |

எனவே இந்நகராட்சியில் Kfw திட்டத்தில் கரூர், இனாம்கரூர் மற்றும் தாந்தோணி பகுதி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்துள்ள குடிநீர் இணைப்புகளுக்கு உள்பகுதி பிளம்பிங் செய்து குடிநீர் இணைப்பு வழங்கும் வகையிலும், வீட்டு வரிவிதிப்பு எண்ணிக்கை அடிப்படையில் அனைத்து சொத்துவரி விதிப்பு கட்டடங்களுக்கும், குடிநீர் இணைப்பு வழங்கும் வகையில் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்ட குடிநீர் இணைப்புகள் போக மீதமுள்ள கட்டடங்களுக்கு இணைப்புகள் வழங்குவதற்கு குடிநீர் விநியோக குழாயினில் இருந்து வெளிப்புறம் மற்றும் உட்புற பிளிம்பிங் பணிகள் செய்து குடிநீர் வீட்டிணைப்புகளை ஒப்பந்ததாரர்கள் மூலம் வழங்கும் பொருட்டு பொருட்களுக்கான செலவினம் மற்றும் இணைப்பு வழங்க பயன்படுத்தப்படும் பணியாளர்களின் கட்டணம் ஆகியவற்றினை சேர்த்து ரூ.**1413.00**இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிதி நிலையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் வட்டியில்லாக் கடனாகப் பெற்று பணிகள் மேற்கொள்ளவும், இணைப்பு வழங்கும் பணிகள் முடித்த பின்னர் செலவினத் தொகையினை குடிநீர் இணைப்பு வழங்கிய

வீட்டு உரிமையாளர்களின் கேட்பில் உரிய தொகையினை பதிவு மேற்கொண்டு அதனை தவணை முறையில் சொத்துவரி அல்லது குடிநீர் கட்டண கேட்புடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி உரிய கருத்துருக்களை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்

2)நகராட்சியில் உள்ள சொத்து வரி விதிப்பு கட்டடங்களுக்கு குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கும் போது குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான மதிப்பீட்டு கட்டணம், பொருட்களுக்கான செலவினம், மேற்பார்வை கட்டணத் தொகை மற்றும் இணைப்பு வழங்க பயன்படுத்தப்படும் பணியாளர்களின் கட்டணம் ஆகியவற்றினை சேர்த்து கணக்கிடப்பட்டு வீட்டு உரிமையாளர்களிடமிருந்து சொத்துவரி அல்லது குடிநீர் கட்டண கேட்புடன் சேர்த்து தவணை முறையில் வசூல் செய்து நகராட்சி கணக்கில் வரவு வைத்து செலவினத்தை ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.831 அனுமதிக்கப்பட்டது.

24) கரூர் நகராட்சிக்குட்பட்ட தோரணக்கல்பட்டி கிராமம் புல எண். 382/1 அரசு தீர்வை ஏற்படாத தரிசு (கல்லாங்குத்து) மொத்த விஸ்தீரனம் 3.30.5 ஹெக்டேரில் 2.92.0 ஹெக்டேர் நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வீடுகள் அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண் ஆ2/13799/2017 நாள். 20.09.17—ல் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி இடமானது கரூர் முழுமைத்திட்டத்தின்படி விவசாய உபயோகப்பகுதியில் அமைவதால் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் 640 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட ஏதுவாக விவசாய உபயோகப் பகுதியிலிருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்யக்கோரி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அரசுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வழியாக அனுப்பப்பட்டதில் விவசாயப் பகுதியில் இருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்ய உள்ளாட்சியின் பரிந்துரை கடிதம் பெற்று அனுப்ப நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.238/18/திம2 நாள்.14.03.2018—ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் திருப்பூர் அவர்களின் கடித ந.க. எண் 310/JA/TPr/DA/2018 நாள். 14.03.18ல் விவசாய நில உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்ய உள்ளாட்சி பரிந்துரை கடிதம் கோரப்பட்டுள்ளது.

அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் அரசுமூலம் வீடுகள் கட்டப்பட உள்ளதால் தோரணக்கல்பட்டி கிராமம் புல எண் 382/1ல் 2.92.0 ஹெக்டேர் நிலத்தினை விவசாய நில உபயோகத்தில் இருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துறை மூலம் அரசைக் கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2)அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் அரசு மூலம் வீடுகள் கட்டப்பட உள்ளதால் தோரணக்கல்பட்டி கிராமம் புல எண் 382/1ல் 2.92.0 ஹெக்டேர் நிலத்தினை விவசாய நில உபயோகத்தில் இருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக நில மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துறை மூலம் அரசைக் கேட்டுக்கொள்ளலாம். (எப்1/3223/2018)

தீர்மான எண்.832 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு புதிய குடிநீர் இணைப்புகளுக்கான சாலை சீரமைப்பு கட்டணம் நடப்பாண்டிற்கு 01.04.2018 முதல் 31.03.2019 வரை கீழ்கண்டவாறு திருத்திய சாலை சீரமைப்பு கட்டணம் வசூல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | அளவு | சாலையின் விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1) | 0.0 M to 30 M | மண் சாலை | ரூ.3,475/— |
| 2) | 0.0M to 30 M | தார் சாலை | ரூ.5,655/— |
| 3) | 0.0M to 30 M | சிமெண்ட் சாலை | ரூ.7,765/— |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)01.04.2018 முதல் 31.03.2019 வரை திருத்திய சாலை சீரமைப்பு கட்டணம் வசூல் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

3)மேற்படி திருத்திய சாலை சீரமைப்பு கட்டணத்தை கணிணியில் உள்ளீடு செய்வதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/சிறப்பு/2018)

தீர்மான எண்.833 அனுமதிக்கப்பட்டது.

26)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளைக் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள சிறுமின் விசைப் பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டிய அவசியத்தினை கருதி சிறுமின் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பழுது நீக்கும் பணிகளை தனியார் ஒப்பந்ததாரர்களைக் கொண்டு மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவு செய்து கொள்ளவும் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (இ3/2018)

தீர்மான எண்.834 அனுமதிக்கப்பட்டது.

27)அரசாணை எண்.730, நாள்.30.12.2000ன்படி கரூர் நகராட்சி மற்றும் இனாம்கரூர் பேரூராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.35.00 கோடிக்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி திட்டப் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 2007ஆம் ஆண்டு பணிகள் முடிக்கப்பட்டதுடன் ஐந்தாண்டுகள் இயக்கமும் பராமரிப்பு பணியினை மேற்கொண்டு 2012ம் ஆண்டு ஒருங்கிணைந்த கரூர் நகராட்சியிடம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி திட்டத்தில் 200எம்.எம் முதல் 350எம்.எம் அளவில் 88.02கி.மீ மண் பைப்புகளும் (Stoneware Pipe), 400எம்.எம் முதல் 900எம்.எம் வரை ஆர்.சி.சி பைப்புகள் (R.C.C Pipe) 7.76கி.மீ ஆக மொத்தம் 95.78கி.மீ கழிவுநீர் குழாய்கள், 3013 மனித ஆய்வு குழிகள், இரண்டு கழிவு நீரேற்று நிலையங்கள், ஒரு நீருந்து நிலையம் மற்றும் 15எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை வழிவகை செய்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயல்படுத்தப்பட்டு வந்த பாதாள சாக்கடை திட்டத்தில் அமைக்கப்பட்ட கழிவுநீர் குழாய்கள் 05.11.2015, 01.01.2016 மற்றும் 02.08.2017 ஆகிய நாளன்று வாங்கல் சாலையில் வார்டு எண்.16க்குட்பட்ட ராஜாஜி சாலை மற்றும் ரத்தினம் சாலையில் அமைக்கப்பட்டுள்ளமனித ஆய்வுக் குழியின் அருகாமையில் பதிக்கப்பட்ட 800mm dia RCC கழிவுநீர் குழாய்களின் மேற்பகுதி அரித்து மண் உள்ளே சென்று கழிவுநீர் செல்ல இயலாமல் அடைப்பு ஏற்பட்டு சாலையில் அடிக்கடி பள்ளம் ஏற்பட்டதால் இதுவரை ஒன்பது இடங்களில் 240 மீட்டர் நீளத்திற்கு புதிய 800எம்.எம் விட்டமுள்ள ஆர்.சி.சி பைப் புதிதாக மாற்றப்பட்டது. இப்பணி 25அடி ஆழத்தில் மேற்கொள்வதினால் அமராவதி ஆற்றுப்படுகை ஓர சாலையில் சவுல் மண்ணாக இருப்பதால் பணியினை மேற்கொள்வது மிகுந்த கடினமானதாகவும், மணல் சரியாமலிருக்க கெட்டி இரும்பு தகட்டினால் சென்டிரிங் (Steal centering Sheat) அமைத்து உரிய பாதுகாப்புடன் புதிய கழிவுநீர் குழாய்கள் அமைத்த வகையில் நகராட்சியினால் ரூ.114.00இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் கரூர் மற்றும் இனாம்கரூர் பகுதிகளில் இருந்து சேகரமாகும் பெருமளவிலான கழிவுநீரானது ராஜாஜி சாலையில் உள்ள கழிவு நீர் குழாயின் மூலமாக தான் நீரேற்று நிலையத்திற்கு செல்வதால் 800எம்.எம் விட்டமுள்ள ஆர்.சி.சி குழாயில் காற்று வெளியேறும் வசதியின்றி அமைக்கப்பட்டதால் கழிவுநீர் குழாயின் மேற்பரப்பில் அரிப்பு ஏற்பட்டு குழாய்கள் வலுவிழந்த காரணத்தினால் போக்குவரத்திற்கான சாலைகளில் பெரும் பள்ளங்கள் உருவாகிமண் உள்வாங்கி பெரும் விபத்து ஏற்படுத்தும் சூழலை உருவாக்குவதால் எப்போது அடைப்பு ஏற்பட்டு சாலையில் பள்ளம் விழும் என்ற நிலையே உள்ளது. மேலும் ராஜாஜி சாலையில் உள்ள கழிவுநீர் குழாய்கள் மிகுந்த ஆழத்தில் பதிக்கப்பட்டுள்ளதால் அதனை மாற்றி அமைக்கும் பணியினை மேற்கொள்வது மிகுந்த

சிரமமானதாகவும், மிகுந்த செலவினமும் ஏற்படுவதினால் இத்திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆர்.சி.சி குழாய்களில் கழிவுநீர் வாயு வெளியேற வசதியின்மை காரணமாக குழாயின் மேற்பரப்பு அரித்து குழாய்கள் சேதமடைந்து இதுபோன்ற பழுதுகள் அடிக்கடி ஏற்பட்டு மிகுந்த சிரமத்திற்கு ஆளாக நேரிடுவதினாலும், இதனால் நகராட்சியின் மூலம் கூடுதலாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாலும், இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் ஏற்கனவே பாதாள சாக்கடை திட்டத்தில் அதிக அளவில் கழிவு நீர் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஆர்.சி.சி குழாய்களில் பழுது ஏற்படுவதால் 1300மீட்டர் நீளத்திற்கு புதிதாக கழிவுநீர் வாயு வெளியேற வசதியுடன் கூடிய 800எம்.எம் விட்டமுள்ள ஆர்.சி.சி கழிவுநீர் குழாய் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.80கோடியினை அரசு திட்ட நிதியிலிருந்து முழு மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவதற்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் உரிய நிதி ஒதுக்கீடு செய்து தர கோரியும் உரிய கருத்துருக்களை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம் **(இ5/9714/2017)**

தீர்மான எண்.835 அனுமதிக்கப்பட்டது.

28) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18ல் செங்குந்தபுரம் பிரதான சாலை பழுதடைந்து குண்டும், குழியுமாக உள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதாகவும், மேற்கண்ட சாலையை புதுப்பித்தல் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, செங்குந்தபுரம் பிரதான சாலையை புதுப்பிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.19.00லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/3897/2018)**

தீர்மான எண்.836 அனுமதிக்கப்பட்டது.

29)இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 பகுதியிலுள்ள வேலம்மாள் லே அவுட் தெருவிலுள்ள சிமெண்ட் தளம் மிகவும் மோசமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருப்பதால் மேற்காணும் சாலையினை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.80லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிக் கோரியதையும், மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/2018)**

தீர்மான எண்.837 அனுமதிக்கப்பட்டது.

30) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47 முத்தலாடம்பட்டி முதல் ஏமூர் பஞ்சாயத்து சாலை வரை உள்ள சாலைகள் மண் சாலையாக உள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி புதிதாக தார் சாலை அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.21.60லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/3898/2018)**

தீர்மான எண்.838 அனுமதிக்கப்பட்டது.

31)இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 அண்ணா நகர் பிரதான சாலை (OHTக்கு தெற்குபுற சாலை) பழுதடைந்து குண்டும், குழியுமாக உள்ளதால் மேற்கண்ட தார்சாலை பொதுமக்களின்

போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் இச்சாலையை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட தார் சாலையை புதுப்பிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.12.75லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/3899/2018)

தீர்மான எண்.839 அனுமதிக்கப்பட்டது.

32) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21ல் திருவள்ளுவர் திடல் மைதானத்திற்கு தென்மேற்கு பகுதியில் சுற்றுச்சுவர் பழுதடைந்து விழுந்துவிட்ட காரணத்தினால் மைதானத்தின் பாதுகாப்பு கருதி சுற்றுச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.35,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் பணியினை மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/3900/2018)

தீர்மான எண்.840 அனுமதிக்கப்பட்டது.

33)இந்நகராட்சி வார்டு எண்.28 எல்.என்.எஸ். கிழக்கு பாலு பேக்கரி அருகிலுள்ள தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கவும், இரட்டை வாய்க்கால் பக்கவாட்டில் தடுப்புச்சுவர் கட்டவும், சிறுபாலம் ஒன்று அமைக்கவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6.00இலட்சம் (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிக் கோரியதையும், மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/3043/2018)

தீர்மான எண்.841 அனுமதிக்கப்பட்டது.

